[1st February 1966

புலவர் கா. கோவிந்தன் : தீப்பெட்டி செய்கின்ற முறையில் ஏராளமான பேர் அதைக் குடிசைத் தொழிலாகக் கொண்டு பிழைத்து வருகிறார்கள். இயந்திர வசதியோடு இதற்கு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி விட்டால் அவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தால் அதை மனத்தில் கொண்டு அந்த இயந்திரத் தொழிற்சாலையை அரசாங்கம் கொண்டு வராது என்பதற்கு அமைச்சர் அவர்கள் உறுதி கொடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திரு. மாதா கவுடர் அவர்களுடைய கேள்விற்குப் பதில் கேள்வியாகப் புலவர் கோவிந்தன் அவர்கள் கேட்டுவிட்டார்கள்.

Accumulation of yarn

* 36. *Q*.—SRI V. SANKARAN : } Will the Hon. the
SRI M. S. MANI : }
Minister for industries be pleased to state—

(*a*) whether it is a fact that a representation was made to the Government by the South India Mill Owners' Association regarding the huge accumulation of yarn and cloth in the State; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The hon. Member's attention is invited to the statement under Rule 41 of the Madras Assembly Rules made by the Minister for Industries on 11th November 1965 on this subject.

திரு. எம். எஸ். மணி : பஞ்சாலைத் தொழிலில் உற்பத்தி செய்து முடிந்த பொருள் தேக்கத்தைவிட மூலப்பொருள் இன்றைய தினம் அதிகமாகத் தேங்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எந்தக் காரணத்தினால் இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஞ்சாலையில் நெருக்கடி இருப்பதற்கு இரண்டு, மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. வழக்கமாக நூல் ஏற்றுமதி செய்கின்ற பிரதேசங்களான வங்காளம், பஞ்சாப் முதலிய இடங்களுக்குப் போதிய அளவு நூல் செல்லவில்லை ; நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் அவர்களுடைய 'ஆஃப்டேக்' குறைந்துவிட்டது. இரண்டாவது, பாங்குகளில் போதிய அளவு கடன் வசதி கொடுக்க இயலாததன் காரணமாக கையில் இருக்கும் நூல் விற்காமல் போனதுடன் புதிதாக உற்பத்தி செய்யவும் முடியவில்லை.

திரு. சா. கேணசன் : என்னவோ காரணங்கள் இருந்தாலும் தேக்கம் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. இந்த நேரத்தில் மில்களை மேலும் அதிகரிக்காமல், இருக்கிற மில்களில் ஸ்பிண்டில்களை அதிகரிக்காமல், இருக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, சாதாரணமாகக் கட்டுப்பாடுகளே செய்யக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் இயங்குகிற கட்சி, இனி

1st February 1966]

புதிதாக மில்கள் கொடுக்க வேண்டாம் அல்லது கதிர்கள் கொடுக்க வேண்டாமென்று கட்டுப்படுத்தச் சொல்வது சற்று ஆச்சரியமாக இருக்கிறது. அந்த விதமான கொள்கை சர்க்காருக்கு இல்லை.

திரு. எம். எஸ். மணி : இந்த ஆலைகளில் நூல் துணித் தேக்கம் ஏற்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் பலர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சிலர் மில்லை மூடிவிட்டார்கள். தமிழ்நாட்டில் நாலைந்து மில்கள் மூடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. மகாராஷ்டிராவில் மூடப்பட்ட மில்களை அரசாங்கம் ஏற்று நடத்த முன் வந்திருக்கிறது. அதே போன்று நம்முடைய அரசாங்கமும் மூடப்பட்ட மில்களை ஏற்று நடத்த முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியாகக் கேள்வி போட்டு எந்தெந்த மில்கள் என்ற விவரத்தைக் கொடுத்தால் சர்க்கார் பரிசிலித்துப் பதில் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : துணியோ, நூலோ தேங்கியிருப்பது உண்மை. எந்தெந்த மில்களில் எவ்வளவு தேங்கியிருக்கிறது என்ற தகவல் உண்டா ? இது அரசாங்கத்தின் கொள்கையை முறியடிக்க முதலாளிகளே செய்யும் சதியா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஓரளவு தேக்கம் இருக்கிறது என்பது உண்மை, காரணங்களோ, நோக்கங்களோ என்னால் கண்டுபிடித்துச் சொல்ல முடியாது.

திரு. வை. சங்கரன் : நம்முடைய நூலுக்கு, முன்னால் கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் மார்க்கெட் இருந்தது. தற்போது ராஜஸ்தான் போன்ற வட ராஜ்யங்களில் புதிதாக ஸ்பின்னிங் மில்லை ஏற்படுத்திவிட்ட காரணத்தால் நமது நூலுக்குக் கிராக்கி இல்லாமல் இருக்கிறது. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தெரியவில்லை. பிற ராஜ்யங்களில் மில்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என்று கூறும் அதிகாரம் நமக்கு இல்லை. அவ்வாறு சொல்லவும் கூடாது. பொதுவாக, காம்பெடிஷனில் சிக்கனமாகச் செய்ய மில்கள் முன் வரவேண்டும். அதுதான் நன்றாக இயங்க வேண்டுமென்பது சர்க்கார் நோக்கம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த தேங்கியிருக்கிற நூல் துணி வகைகளில் எந்தெந்த வகைகளில் தேக்கம் இருக்கிறது ? வெளி நாடுகளில் விற்பனையாகக் கூடிய நூல் துணியா அல்லது உள் நாட்டிலேயே விற்பனையாகக் கூடிய நூல் துணியா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : துணித் தேக்கம் அவ்வளவு அதிகமாக இல்லை. 15,000 பேல்ஸ் என்று சொல்லப்படுகிறது. நூல் தேக்கம் 20,000 பேல்ஸ் என்றிருக்கிறது. என்ன கவுண்ட் என்று சொல்ல விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துக் கொடுக்க முடியும்.

[1st February 1966

திரு. எம். எஸ். மணி : நூல் துணித் தேக்கத்தால் சில மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. கோவையில் உள்ள கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸிலுள்ள டைரக்டர்களுக்குள்ளாக ஏற்பட்ட தகராறுல் மூடப்பட்டிருக்கிறது. அந்த மில்லையாவது அரசாங்கம் எடுத்து நடத்தி, தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் சொன்னேன், தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து தகவல் தயாரித்துக் கொடுக்க முடியும் என்று.

திரு. இராம. அரங்கண்ணல் : இப்போது ஏராளமான நூற்பாலைகள் நம் மாநிலத்தில் வளர்ந்திருக்கின்றன. இந்தச் சரக்குகள் எல்லாம் பல அண்டை நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தன. சுதந்திரம் பெறுமல் இருந்த காரணத்தினல், ஆங்காங்கு நூற்பாலைகள் இல்லாதிருந்த காரணத்தினல் நம் துணிகளுக்கு சிலோன், பர்மா, மலேயா போன்ற இடங்களில் மதிப்பு இருந்தது. இப்போது அவ்விடங்களிலும் இப்படிப்பட்ட ஆலைகள் விஸ்தரிக்கப் படுவதால் நம் சரக்குகளை அதிகமாக ஏற்றுமதி செய்யமுடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்து நம் சரக்குகளை ரஷ்யா போன்ற இடங்களில், நம் துணிகளுக்குக் கிராக்கியிருப்பதாகச் சொல்கிருர்கள், அங்கு அதிகமாக அனுப்புவதற்கு நம் அரசாங்கம் ஏதாவது திட்டம் வகுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ராஜ்ய சர்க்கார் பொறுப்பல்ல. மத்திய அரசாங்கந்தான் இதற்கான ஏற்பாடு செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் தேங்கியிருக்கிற நூல் துணி எவ்வளவு என்று ஒரு புள்ளி விவரம் கொடுத்தார்கள். அது என்றைய புள்ளிவிவரம் என்று அறியலாமா ? மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் நம் ராஜ்யத்திற்கு எவ்வளவு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது ? அந்த இலக்கிற்கு துணி நூல் உற்பத்தியாகிறதா ? அந்த அளவிற்குக் குறைவாக உற்பத்தியாகிறதா அல்லது அதிகமாக உற்பத்தியாகிறதா ? புள்ளிவிவரம் இல்லாவிட்டாலும் அதுபற்றிய தகவலாவது கொடுக்கமுடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் கொடுத்த புள்ளி விவரம் அக்டோபர் மாத புள்ளிவிவரம். அதற்குப் பிறகு எங்களுக்கு வந்திருக்கிற தகவல், இன்று தேக்கம் குறைந்து கொண்டே வருகிறது, நூல் வேகமாக விற்பனையாகிக் கொண்டு வருகிறது என்பதாகும். ஆனுல், நூல் விற்பனையாகிக் கொண்டு வருகிறது என்று சொல்லும்போது சில மில்களின் நூல் விற்பனையாவதில்லை. தரம் குறைவான காரணத்தினுலோ அல்லது பழைய இயந்திரங்கள் காரணத்தினுலோ, வேறு எந்தக் காரணத்தினுலோ சில மில்களின் நூல் விற்கவில்லை. இலக்கு பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்லமுடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தேங்கியிருக்கக் கூடிய சரக்குகளை வேகமாக விற்பனை செய்வதற்கு மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் இதற்காக க்ரெடிட் ஸ்க்வீமை தளர்த்தி அவர்களுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ரிசர்வ் பாங்க் விதிகளைத் தளர்த்தியிருக்கிறார்கள். மில் ஓனர்கள் மத்திய அரசாங்கத்தினிடமும் நம் மாநில அரசாங்கத்தினிடமும் கோரினார்கள். எங்களுக்குப் பணவசதி செய்து கொடுத்தாலே போதும் என்று சொன்னார்கள். அதற்கான ஏற்பாடு ஓரளவு செய்யப்பட்டிருக்கிறது.

Manufacture of industrial explosives

* 37. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to set up factories for the manufacture of industrial explosives such as detonators and plastic explosives in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have no proposal to set up any undertaking in the public sector in the State for the manufacture of industrial explosives. A letter of intent for the establishment of an industrial undertaking in this State to manufacture 15 million numbers of detonators per annum has been granted by the Government of India in the Private Sector.

திரு. வை. சங்கரன் : இதுபோன்று போருக்குப் பயன்படக் கூடிய தளவாடங்கள் இதர சாமான்கள் போன்றவை, நம் ராஜ்ய எல்லைக்கு அப்பால் இருக்கக்கூடிய காரணத்தினால் இங்கேயே தயார் செய்வது அனுகூலமாக இருக்கும் என்பதால் மத்திய அரசாங்கத்தினிடம் சொல்லி தனியார் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ அந்தத் தொழிற்சாலைகளை இங்கு ஆரம்பிக்க மத்திய அரசாங்கத்தினிடம் நம் அரசாங்கம் வற்புறுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது போருக்கு உபயோகப்படுத்துவது அல்ல. இது டெட்டொனேட்டர்ஸ். கிணறுகளை வெடிப்பதற்கும், டன்னல்கள் போன்றவை செய்வதற்கும் வெடி வைக்கக் கூடியது. இது ஸிவில் பர்பஸுக்காக உபயோகப்படுத்தக் கூடியது. ஆகவே, கனம் அங்கத்தினர் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

Rehabilitation of disabled defence personnel

* 38. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any scheme has been envisaged by the Government for rehabilitation of defence personnel, hailing from the State disabled in action?

THE HON. SRI R. VENKATARAMAN : No specific scheme for rehabilitation of defence personnel, disabled in action has been envisaged in this State However, disabled jawans and families